தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 13 Sep 2011 06:24:48 AM IST

சென்னை, செப்.13: தமிழகம் மற்றும் புதுவையில் செவ்வாய்க்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவையில் செவ்வாய்க்கிழமை மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியசாக இருக்கும்.

**தோட்டக்கலை செயல்பாடு: துணை இயக்குநர் ஆய்வு**

First Published : 12 Sep 2011 10:30:26 AM IST

விழுப்புரம், செப். 11: விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையினரின் திட்ட செயல்பாடுகளை துணை இயக்குநர் என்.பன்னீர்செல்வம் ஆய்வு செய்தார்.

கோலியனூர் ஒன்றியம் பிடாகம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ந.சீ.தண்டபாணியின் வயலில் திசு வாழையில் ஊடுபயிராக நடவு செய்த பெல்லாரி வெங்காயம் பயிரைப் பார்வையிட்டார்கள்.

மேலும் தோட்டக்கலைத் துறையின் உயர் தொழில்நுட்பத்தில் வெங்காயம் சாகுபடி செய்வதற்கு, ஹெக்டருக்கு ரூ.7,500 மதிப்பில் 19:19:19 நீரில் கரையும் உரங்கள், இமிடாகுளோபிரிட், நுண்ணுரங்கள், டைத்தேன் பெவிஸ்டின், எண்டோசல்பான் மருந்துகள், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற நுண்ணுயிர் பொட்டலங்கள் தண்டபாணிக்கு வழங்கப்பட்டது.

மேலும் வெங்காயம் சாகுபடி செய்தல் குறித்த சாகுபடி குறிப்புகளும் வழங்கப்பட்டன. இந்த ஆய்வின்போது, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் க.வீராசாமி, வேளாண்மை உதவி அலுவலர்கள் பரமசிவம், கலையரசன், ரமேஷ், இளவரசி, ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் உழவர்கள் அறிவழகன், பேரொளி ஆகியோர் உடனிருந்தனர்.

**இறால் விலை வீழ்ச்சி: மீனவர்கள் நஷ்டம்**

First Published : 12 Sep 2011 01:12:01 PM IST

ராமேசுவரம், செப். 11: ராமேசுவரத்தில் இறால் மீன் விலை வீழ்ச்சியால் மீனவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை நஷ்டம் ஏற்பட்டது.

ராமேசுவரம், பாம்பன், மண்டபத்தில் சுமார் 2 ஆயிரம் விசைப்படகுகள் இறால் மீன்களை மட்டுமே பிடிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளன.

இதனால் கடலில் பிடிக்கப்படும் இறால் மீன்களை வைத்துதான் மீனவர் கூலி, எரிபொருள் செலவு போக படகு உரிமையாளர் லாபம் பார்க்க முடியும்.

மீனவர்கள் சராசரியாக 20 கிலோ முதல் 30 கிலோ வரை இறால் மீன்களை பிடிப்பது வழக்கம்.

இம்மீன்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ. 420 முதல் ரூ. 500 வரை விலை கொடுத்து ஏற்றுமதி கம்பெனிகள் கொள்முதல் செய்வதுண்டு.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மீனவர்கள் பிடித்த இறால் மீன்களுக்கு கிலோவுக்கு ரூ. 330 முதல் ரூ. 380 வரை தான் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த விலை வீழ்ச்சி கடந்த சில நாள்களாக நீடித்து வருகிறது.

இதனால் கிலோவுக்கு ரூ. 80 முதல் ரூ. 100 வரை நஷ்டம் ஏற்பட்டு வருவதால், தொடர்ந்து மீன்பிடிக்கச் செல்வது கடினம் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், இந்திய ரூபாய் மதிப்பில் அமெரிக்க டாலரின் மதிப்பு குறைந்தது.

இதனால் ஏற்றுமதியாகும் இறால் மீன்களின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக, ஏற்றுமதி கம்பெனி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு வேளாண்மை உதவிப் பொருள் வழங்கினார் எம்எல்ஏ**

First Published : 12 Sep 2011 01:05:22 PM IST

உசிலம்பட்டி, செப். 11: மதுரை மாவட்டம், செல்லம்பட்டி பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மை உதவிப் பொருள்களை சட்டப்பேரவை உறுப்பினர் பி.வி.கதிரவன் வழங்கினார்.

செல்லம்பட்டி வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற இதற்கான விழாவுக்கு மதுரை துணை வேளாண் இயக்குநர் சம்பத்குமார் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை இயக்குநர் அழகப்பன் வரவேற்றுப் பேசினார். துணை வேளாண் அலுவலர் சேகர், வேளாண் அலுவலர் தனசேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சின்னமாயன், கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளரான உசிலம்பட்டி சட்டப்பேரவை உறுப்பினர் பி.வி.கதிரவன் விவசாயப் பெருமக்களுக்கு அரசு நலத் திட்ட வேளாண்மை உதவிப் பொருள்களை வழங்கினார்.

மேலும் செல்லம்பட்டி, சிந்துபட்டி, விக்கரமங்கலம், வேளாண்மைக் கிடங்குகளில் விவசாயிகளுக்கு தேவையான நெல் ரகங்கள் போதியளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.அரசு மாநிய விலை ரூ.5 கிலோ, அதே போல் பயிர் வகைகள், நிலக்கடலை விதை, எள் விதை, ஆராய்ச்சிப் பண்ணை மினிகிட் ஆகியன அரசு மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. மண் மாதிரி ஆய்வு செய்ய விரும்பும் விவசாயிகள் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு உரிய முறையில் மண் மாதிரி எடுத்து அதற்குத் தேவையான உர அளவுகள் சிபாரிசுகள் வழங்கப்படும்.

விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உதவி வேளாண் அலுவலர் பூமிநாதன் நன்றி கூறினார்.

**புதிய பால் உற்பத்திச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும்: ஆட்சியர்**

First Published : 12 Sep 2011 02:19:09 PM IST

தஞ்சாவூர், செப். 11: கிராமப்புறங்களில் புதிய பால் உற்பத்திச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தெரிவித்தார்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பால் உற்பத்தியை பெருக்கவும், பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம் பட்டுவாடா உள்ளிட்ட சேவைகளை தொய்வின்றி அளிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் தஞ்சாவூரில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் மேலும் பேசியது:

விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கறவை மாடுகள் வளர்த்தல் மிகச் சிறந்த துணைத் தொழிலாகும். தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உற்பத்தியை நாளொன்றுக்கு 60,000 லிட்டர் அளவுக்கு உடனடியாக உயர்த்தவும், இதே அளவை, வற்றுக் காலத்திலும் தொடர்ந்து நிலைப்படுத்தவும் உரிய நடவடிக்கைக் மேற்கொள்ள வேண்டும். கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயலர்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பால் ஊற்றும் நபர்களை உறுப்பினர்களாக்கி தரமான பாலை கொள்முதல் செய்ய வேண்டும். பால் உற்பத்தியை மேம்படுத்த அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார் பாஸ்கரன்.

தினமலர்

# போலி பூச்சி மருந்து விற்பனை ரூ.2,000 கோடியை தாண்டும்

செப்டம்பர் 13,2011,05:19



மும்பை : நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டில் போலி பூச்சி மருந்துகள் விற்பனை 2,000 கோடி ரூபாயை தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டில், பூச்சி மருந்துகளுக்கான சந்தை மதிப்பு, 8,000 கோடி ரூபாய் என்றளவில் உள்ளது. இதில், போலி பூச்சி மருந்துகளின் மதிப்பு 2,000 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும் என, கிராப் லைப் இந்தியா நிறுவனம், தொழில்நுட்ப வேளாண் நிறுவனங்களுடன் சேர்ந்து மேற்கொண்ட ஆய்வின் வாயிலாக தெரியவந்துள்ளது. பொதுவாக, போலிபூச்சி மருந்துகள், அதிகளவில் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இப்பூச்சி மருந்துகள், பூச்சிகளை அழிப்பதில்லை. இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் செலவு மட்டுமே ஆகிறது என, இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து கிராப் லைப் இந்தியா நிறுவனத்தின் தலைமை செசயல் அதிகாரியும், இயக்குனருமான பி.கே. மஜூம்தார் கூறுகையில்," கடந்த நிதியாண்டில் உள்நாட்டில் பூச்சி மருந்துகளின் விற்பனை 1,600 கோடி ரூபாய் மதிப்பிற்கு இருந்தது. இதில், 500 கோடி ரூபாய் மதிப்பிற்கான பூச்சிமருந்துகள் துணை பொருள்கள் பிரிவின் கீழ் இடம்பெற்றிருந்தன' என்றார். நடப்பாண்டு ஜூலை மாதத்தில், ஆந்திர மாநிலத்தின் வேளாண்துறை, 309 வகையான போலி பூச்சிமருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஆந்திரா, கர்நாடக, மகாராஷ்டிரம் ஆகிய மூன்று மாநிலங்களிலுமாக, போலி பூச்சிமருந்துகளின் விற்பனை 65 சதவீத அளவிற்கு உள்ளது.

**திருந்திய நெல் சாகுபடி பரப்பளவு குறைவு :கரும்பு, மஞ்சள் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2011,01:49 IST

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி பரப்பளவு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட குறைகிறது. கரும்பு பயிரிட அதிக ஆர்வமும், விலை குறைந்தாலும் கூட மஞ்சளையும் பயிரிட விவசாயிகள் முனைப்பும் காட்டி வருகின்றனர். ஈரோடு மாவட்ட பாசனத்துக்கு காவிரி ஆறு, பவானிசாகர் அணை, காலிங்கராயன் வாய்க்கால் திறந்து விடப்பட்டுள்ளது. அதை பயன்படுத்தி சம்பா சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஈரோடு, பவானி, அந்தியூர், கோபிச்செட்டிபாளையம், கொடுமுடி, பவானிசாகர், பெருந்துறை, சென்னிமலை, மொடக்குறிச்சி பகுதியில் அதிகளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டம் முழுவதும் நெல் சாகுபடி 30 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிடப்படுவது வழக்கம். அதற்கான விதை ரகங்களான ஆடுதுறை 38, 39, 45, கோ 49, ஐ.ஆர்.,20, பி.பி.டி., ஆகியவை வேளாண் விரிவாக்க மையங்களில் மட்டுமே 350 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. திருந்திய நெல் சாகுபடி பரப்பளவு இந்தாண்டு அதிகரிக்க வேண்டும் என மாவட்டம் முழுவதும் 25 ஆயிரம் ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மாவட்டத்தில் இதுவரையில் 5,000 ஹெக்டேர் பரப்பளவு மட்டுமே திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டை விட இந்தாண்டு மஞ்சள் விலை கடும் சரிவால், மஞ்சள் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்ட மாட்டார்கள் என வேளாண் துறையினர் நினைத்தனர்.

அதனால், நெல் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என எதிர்பார்த்தனர். மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் விலை குறைவால், விலை உயர்வை எதிர்பார்த்து மஞ்சளை விற்காமல் இருப்பு வைத்துள்ளனர். இந்தாண்டும் மஞ்சள் பயிரிட துவங்கி விட்டனர். அதுபோல், கரும்பு சாகுபடி பரப்பும் குறையும் என எதிர்பார்த்த நிலையில், விவசாயிகள் மீண்டும் கரும்பை பயிரிட்டுள்ளனர். அதனால், நெல் சாகுபடி பரப்பு எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில ரக நெல் விதைகள் விற்காமல் குடோன்களில் இருப்பு உள்ளன. மஞ்சள், கரும்பு என, பணப்பயிருக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதால், அரிசி விலை வரும் ஆண்டில் உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். வேளாண் துறை அதிகாரிகள், வட்டார அளவில் நெல் பயிரிடும் பரப்பை அதிகப்படுத்தும் முயற்சியில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளனர். திருந்திய நெல் சாகுபடிக்கு அரசு மானியம் அளிக்கிறது. அதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும், என அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சரிவை நோக்கி மஞ்சள் விலை பரிதாப நிலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2011,01:42 IST

ஈரோடு : ஈரோடு மஞ்சள் சந்தையில் ஒரு வாரமாக மஞ்சள் விலை அடுத்தடுத்து சரிவை நோக்கி செல்வதால், பெரும் நட்டத்தை ஏற்படுத்தி உள்ளது என விவசாயிகள் புலம்புகின்றர். ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி ஆகிய நான்கு மஞ்சள் சந்தைகள் ஈரோட்டில் செயல்படுகிறது. கடந்தாண்டு மஞ்சள் விலை உயர்வால், மஞ்சள் சாகுபடியின் பரப்பளவு நடப்பாண்டு அதிகரித்தது.

விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், மஞ்சள் சந்தைகளில் மஞ்சள் தேவைக்கு அதிகமான வரத்தால் தேக்கம் அடைந்துள்ளது. மழையால் மஞ்சள் தரமும் குறைந்து காணப்படுகிறது. இந்நிலையில், மஞ்சள் தேவை குறைந்துள்ள நிலையில் ஏற்றுமதி கணிசமாக குறைந்து வருகிறது. விலை உயர்வால் அதிக செலவில் மஞ்சள் சாகுபடி செய்தவர்களுக்கு, தற்போது விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் பெரும் நட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. சென்ற 5ம் தேதி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.5,389ல் இருந்து அதிகபட்சம் 5,714 ரூபாய்க்கு விற்றது. நடப்பு வாரம் 4,669 ரூபாய்க்கு விற்க்கப்பட்டது.

கிழங்கு குவிண்டால் ரூ.4,869ல் இருந்து 5,129 ரூபாய்க்கு விற்றது, தற்போது, ரூ.4,299ல் இருந்து 4,699 ரூபாய்க்கு விற்க்கப்பட்டது. ஒரு வாரத்தில் விரலி குவிண்டாலுக்கு 720 ரூபாயும், கிழங்கு குவிண்டாலுக்கு 570 ரூபாயும் குறைந்துள்ளது. தினசரி ஒரு விலை மாற்றத்தால் விவசாயிகளுக்கு பெரும் பின்னடை ஏற்படுத்தி உள்ளது. வெளிமாநில வியாபாரிகள் முற்றிலும் வருகை குறைந்துள்ளது. மஞ்சள் விலை குறைய வாய்ப்புள்ளது என உள்ளூர் மஞ்சள் ஏஜன்ட் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**மீன் வளர்ப்போருக்கு எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,22:23 IST

கோவை : "ஆப்பிரிக்க கெழுத்தி மீன்களை வளர்க்கவோ, விற்பனை செய்யவோ கூடாது' என, கலெக்டர் கருணாகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ஆப்பிரிக்க கெழுத்தி மீன் வளர்த்தல் மற்றும் விற்பனை செய்தல் மத்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவானது, தமிழக அரசு மீன் வளத்துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தை சேர்ந்த மீன் வளர்ப்போர், தடை செய்யப்பட்ட

மீன் இனமான ஆப்பிரிக்க கெழுத்தி மீனை வளர்க்கவோ, விற்பனை செய்யவோ கூடாது. தடையை மீறி, ஆப்பிரிக்க கெழுத்தி மீன் வளர்த்தாலோ, விற்றாலோ, குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, கலெக்டர் எச்சரித்துள்ளார்.

**பூண்டி ஏரி நீர்மட்டம் கிடுகிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,23:37 IST

ஊத்துக்கோட்டை : தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் கிருஷ்ணா நீரால், பூண்டி ஏரி நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து, ஜூன் மாதம் 23ம் தேதி முதல் கிருஷ்ணா நீர் தமிழகத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயின்ட் வழியாக, 25 கி.மீ., கடந்து பூண்டி ஏரியை அடைகிறது. தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் கிருஷ்ணா நீரால், பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நீர், வினாடிக்கு 669 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஏரியில் மொத்தம், 2,527 மில்லியன் கன அடி நீர் உள்ளது. ஏரியின் நீர் மட்டம், 33.03 அடி. இங்குள்ள "லிங்க்' கால்வாய் மூலம் வினாடிக்கு, 397 கன அடி வீதம் திறக்கப்பட்ட நீர் புழலேரிக்கு செல்கிறது. பேபி கால்வாய் மூலம் வினாடிக்கு, 90 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு, அங்குள்ள நீரேற்று நிலையம் வழியாக, சென்னை சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பி, சென்னை மக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

**பண்ருட்டியில் அட்மா திட்ட விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 12,2011,21:21 IST

பண்ருட்டி : அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் சார்பில் அட்மா திட்டத்தில் விவசாயிகள் கூட்டம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் சம்பத்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, பட்டுபுழு வளர்ப்பு, மீன்வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள 24 விவசாயிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் இரண்டு ஆண்டு செயல்படும் குழு தலைவர் தேர்தல் நடந்தது. இதில் குழு தலைவராக கள்ளிப்பட்டு ராஜேந்திரன் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். தோட்டக்கலை உதவி இயக்குனர் பிரேமா, வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் சேகர், கூட்டுறவு சார்பதிவாளர் அறவாழி,

பட்டுவளர்ப்புதுறை உதவி ஆய்வாளர் ஜெயபாலன், வேளாண்மை அலுவலர் சுரேஷ், சந்திரராசு, தாமோதரன் ஆகியோர் பேசினர். ஒன்றிய சேர்மன் கவுரிபாண்டியன், துணை சேர்மன் சம்பந்தம், அ.தி. மு.க., ஒன்றிய செயலாளர் விபீஷணன், தண்டபாணி, செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**_சென்ற வாரத்தில் அரிசி ஏற்றுமதி நிறுவன பங்குகளின் விலை உயர்வு_**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*மும்பை பங்குச் சந்தையில் சென்ற வார வர்த்தகத்தில் அரிசி ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனப் பங்குகளின் விலை 7 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.*

*பாசுமதி அல்லாத அரிசியை குறைந்த அளவில் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அண்மையில் அனுமதித்தது. இதனால் ஏற்றுமதி நிறுவனங்களின் லாப வரம்பு உயரும் என்ற எதிர்பார்ப்பில் பல நிறுவனங்களின் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது.*

*மும்பை பங்குச் சந்தையில், வெள்ளிக்கிழமையன்று வர்த்தகம் முடியும்போது,*

கே.ஆர்.பீ.எல். நிறுவனப் பங்கின் விலை 7.18 சதவீதம் உயர்ந்து ரூ.29.10—ல் நிலை கொண்டது. கோனூர் ஃபுட்ஸ் நிறுவனப் பங்கின் விலை 6.72 சதவீதம் அதிகரித்து ரூ.45.25—ஆக உயர்ந்தது. எல்.டி. ஃபுட்ஸ் பங்கின் விலை 4.62 சதவீதம் உயர்ந்து ரூ.48.65—ஆக அதிகரித்தது.

அண்மைக் காலமாக பங்குச் சந்தைகளில் பெரும் மந்தநிலை காணப்படுகிறது. இந்த நிலையிலும் அரிசி ஏற்றுமதி நிறுவனப் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கோதுமை மற்றும் அரிசி ஏற்றுமதி தலா 20 லட்சம் டன் என்ற அளவை எட்டியதும் ஏற்றுமதி நிறுத்தப்படும் என உணவுத் துறை அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்துள்ளார்.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் ரூ.3 விலை உயர்வு

குன்னூர், செப்.13—

குன்னூர் ஏல மையத் தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்த கர்கள் பங்களிப்பு அதிகமாக இருந்ததால் அனைத்து ரக தேயிலை தூள்களுக்கும் ரூ.3 வரை விலை உயர்வு ஏற் பட்டது.

ஏலம்

வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கின்றனர்.

இலைரக தேயிலை தூளின் ஏலம் ஒரு நாளும், டஸ்ட் ரகம் மற்றொரு நாளும் ஏலம் விடப் படுகிறது. விற்பனை எண் 36—க்கான ஏலம் கடந்த 8, 9 ஆகிய தேதிகளில் நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 96 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 8 லட்சத்து 23 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இலை ரகமாகவும், 3 லட்சத்து 73 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாக வும் இருந்தது.

வெளிநாட்டு வர்த்தகர்கள்

ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.இதனால் 85 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்ததால் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் கிலோ

ஒன்றுக்கு 3 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டது.

சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 139 ரூபாயாக இருந்தது. 202 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக இருந்தது.சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 39 ரூபாயில் இருந்து 44 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 122 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 45 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 136 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.

விற்பனை எண் 37–க்கான ஏலம் வருகிற 15, 16 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத் திற்கு மொத்தம் 11 லட்சத்து 32 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,செப்.12–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,800 | 72.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4000 | 42.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,செப்.12–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,874
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8,436
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,648
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10,264
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,389
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,529
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 14,904

## கோவை உழவர் சந்தை

கோவை,செப்.12–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60–70 |
| கத்தரிக்காய் | ரூ. | 20–22 |
| வெண்டைக்காய் | ரூ. | 10–12 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 11–12 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 13–14 |
| புடலை | ரூ. | 17–20 |
| பீர்க்கான்காய் | ரூ. | 14–16 |
| சுரைக்காய் | ரூ. | 10–15 |
| பாகற்காய் | ரூ. | 12–16 |
| கொத்தவரை | ரூ. | 16–18 |
| பூசணிக்காய் | ரூ. | 8–11 |
| அரசாணிக்காய் | ரூ. | 8–10 |
| மேராக்காய் | ரூ. | 12–16 |
| பச்சை மிளகாய் | ரூ. | 22–24 |
| குண்டு மிளகாய் | ரூ. | 28–30 |
| சின்னவெங்காயம் | ரூ. | 18–21 |
| பெரியவெங்காயம் | ரூ. | 18–00 |
| இஞ்சி | ரூ. | 20–40 |
| முருங்கைக்காய் | ரூ. | 24–30 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–22 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 40–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–00 |
| முள்ளங்கி | ரூ. | 12–14 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20–26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12–20 |
| நூல்கோல் | ரூ. | 20–24 |
| கொத்தமல்லி | ரூ. | 24–26 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20–22 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 |
| கலர்கோஸ் | ரூ. | 18–00 |
| புதினா | ரூ. | 16–00 |

| | | |
|---|---|---|
| காலிப்பிளவர் | ரூ. | 16–22 |
| பொறியல் தட்டை | ரூ. | 16–20 |
| தேங்காய் | ரூ. | 7–13 |
| பட்டாணி | ரூ. | 100–120 |
| கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| அகத்தி | ரூ. | 16–00 |
| வாழைக்காய் | ரூ. | 18–20 |
| குடைமிளகாய் | ரூ. | 30–32 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 20–24 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 44–00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 20–24 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 32–38 |
| காளான் | ரூ. | 80–150 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| மாங்காய் | ரூ. | 40–00 |
| திராட்சை | ரூ. | 38–00 |
| சப்போட்டா 1கிலோ | ரூ. | 17–20 |
| கொய்யா 1கிலோ | ரூ. | 16–20 |
| மாதுளை 1கிலோ | ரூ. | 100–00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| வரமிளகாய் | ரூ. | 100–00 |
| மாம்பழம் | ரூ. | 40–50 |
| ஆப்பிள் | ரூ. | 100–130 |
| சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| நெல்லிக்காய் | ரூ. | 30–32 |
| ஆரஞ்சு | ரூ. | 60–00 |
| வெள்ளரி | ரூ. | 12–28 |
| புளி 1 கிலோ | ரூ. | 75–80 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–32 |
| அவரை | ரூ. | 22–28 |
| நிலக்கடலை | ரூ. | 30–00 |
| மக்காச்சோளம் | ரூ. | 12–20 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,செப்.12–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் கணபதி பிராண்ட் | ரூ.1,740 | 115.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,220 | 75.00 |
| சன் பிளவர் ஆயில் கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1270 | 82.00 |
| பருத்தி விதை எண்ணை ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை பூர்ணாபிராண்டு | ரூ.1240 | 80.00 |
| நல்லெண்ணை காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி லிஸ்லி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1030 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.181.00 | அதிகபட்சவிலை | ரூ.266.00 |
| சராசரி விலை | ரூ.154.09 | சராசரி விலை | ரூ.240.10 |
| குறைந்தபட்சவிலை | ரூ.130.00 | குறைந்தபட்சவிலை | ரூ.206.00 |

**பட்டு நூல் ரூ.1,671**

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 28,500 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 29,000 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 30,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 14,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 14,300 |
| சுக்கு (புதியது) | ரூ. 12,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9100 |
| கொப்பரை நாடன் | ரூ. 5800 |
| கொப்பரை ராசு | ரூ. 5750 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 5925 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 5200 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7400 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20,300 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21,250 |
| ரப்பர் பால் | ரூ. 15,600 |
| காப்பி | ரூ. 10,600 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2200 |
| இஞ்சி | ரூ. 1300 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | கோவை | திருப்பூர் |
|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,232.00 | 21,320.00 |
| ஒரு கிராம் | 2,654.00 | 2,665.00 |
| **வெள்ளி** | | |
| 1 கிலோ | 69,750.00 | 69,500.00 |
| ஒரு கிராம் | 69,75 | 69,50 |